★★ தினமணி விழுப்புரம் 3

புதுச்சேரி

செவ்வாய்க்கிழமை, 24 டிசம்பர் 2019

# மகாத்மா காந்தி குறித்த ஆவணப்படம் திரையீடு



புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற மகாத்மா காந்தி பற்றிய ஆவணப்பட திரையிடல் நிகழ்வை குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைக்கிறார் காந்தி நிர்மாணத் திட்ட அருங்காட்சியக இயக்குநர் தா. ரவிச்சந்திரன்.

**புதுச்சேரி, டிச. 23:** இந்திராகாந்தி தேசியக் கலை மையம், புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், கலை பண்பாட்டுத் துறை இணைந்து நடத்திய ஏ.கே. செட்டியாரின் மகாத்மா காந்தி பற்றிய சித்தரிப்பு என்ற தலைப்பிலான சொற்பொழிவு, ஆவணப்படம் திரையிடல் நிகழ்வு புதுச்சேரியில் திங்கள்கிழமை நடைபெற்றது.

புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிராம நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் உள்ள காந்திய சிந்தனை ஆய்வு மைய பேராசிரியர், காந்தி நிர்மாணத் திட்ட அருங்காட்சியக இயக்குநர் தா. ரவிச்சந்திரன் பங்கேற்று, சிறப்புரை நிகழ்த்தினார்.

முன்னதாக, புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் இரா. சம்பத் வரவேற்றார். பேராசிரியர் ச. பிலவேந்திரன் அறிமுகவுரையும், இந்திராகாந்தி தேசியக் கலை மையத்தின் மண்டல இயக்குநர் கோபால் நோக்கவுரையும் நிகழ்த்தினார்.

புதுச்சேரி மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தின் முதல்வர் மு. நடனசபாபதி, தாகூர் கலைக்கல்லூரி இணைப் பேராசிரியர் அவ்வை இரா. நிர்மலா ஆகியோர் வாழ்த்திப் பேசினர். கு. தேன்மொழி நன்றி கூறினார்.